Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 ஈரோடு 6-10-1945 புரட்டாசி மீ 20உ மலர் 52

## சுயமரியாதை இயக்கம், நேற்றும் - இன்றும்

### அதாவது 1929லும்; 1945லும்

[சுயமரியாதை இயக்கம் 16வருஷத்துக்குமுன் நடத்திய மாநாட்டில் கலந்துகொண்ட மக்கள் தன்மையும், இன்று அதாவது 1945ல் 16-வருஷம் கழித்து அந்த இயக்கம் எப்படிப்பட்ட மக்களின் கைக்கு வந்துவிட்டது, எப்படிப்பட்டவர்கள் கலந்துகொண்டார்கள் என்பதையும் காட்டுவதற்கும் அதன் கொள்கைகள் இன்று யாருக்குள் புகுந்தவிட்டன என்பதையும் காட்டுவதற்கு இதை எடுத்துப் போடுகிறோம்.]

1929வது பிப்ரவரிமீ செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தவர்கள்.

ஊர்வலம் பந்தலுக்குள் வருவதற்கு முன் பிரதிநிதிகள் பந்தலுக்குள்ளும் மேடைக்குள்ளும் நிறைந்துவிட்டார்கள். மாநாட்டுக்கு ராமநாதபுரம் ராஜா, வெங்கிட்டகிரி ராஜா, பழயகோட்டை பட்டக்காரார் முதலிய ஜமீன்தாரர்களும் சென்னை மாகாணத்து மூன்று மந்திரிகளும், மத்திய மாகாண மந்திரி தோழர் ராகவேந்திரராவ் நாயுடுவும், நிர்வாக சபை இந்திய அங்கத்தினர்கள் தோழர்கள் கனம் கிருஷ்ண நாயர், கனம் மகமது உஸ்மான் ஆகியவர்களும், அரசாங்கக் காரியதரிசி தோழர் வெங்கிட்ட நாராயணாவும், ஸ்மால் காஸ் கோர்ட் சீப்ஜட்ஜி தணிகாசலமும், சென்னை கார்ப்பரேஷன் தலைவர், தியாகராயர் குமாரர் பி. டி. குமாரசாமியும் மற்றும் தோழர்கள் எ. டி. பன்னீர்செல்வம், குமாரசாமி செட்டியார், டபிள்யு. பி. ஏ. சௌந்திரபாண்டிய நாடார், சி. எஸ். இரத்தின சபாபதி, டி. எம். நாராயணசாமி பிள்ளை கரார் கே. கிருஷ்ணசாமி நாயுடு, எஸ். எல்லப்பசெட்டியார், எம். கே. கிருஷ்ணசாமி, நெல்லூர் ராமச்சந்திர ரெட்டியார் முதலிய சுமார் 10 ஜில்லா போர்ட் பிரசிடெண்டுகளும், தோழர்கள் எ. ராமசாமி, பத்பநாப முதலியார், ஆர். எஸ். நாயுடு, சோலை நாடார், அப்துல் ரசாக் சாயபு, தம்மண்ண செட்டியார், வேதாசலம், எம். கோவிந்தராஜுலு முதலிய சுமார் முப்பது முனிசிபல் சேர்மென்களும், தோழர் ஷண்முகம் பிள்ளை, ராஜம் நாயுடு, ரங்கசாமி ரெட்டியார், உமாமகேஸ்வரம், ஐ. குமாரசாமி முதலிய 20, 30 தாலூகா போர்டு தலைவர்களும், சுமார் 1000 பேர்களுக்கு மேற்பட்ட ஜில்லா, தாலூகா போர்டு, முனிசிபல் மெம்பர்களும் சற்றேறக்குறைய எல்லா சட்டசபை அங்கத்தினர்களும், தோழர் க. நமசிவாய முதலியார் முதலிய நூற்றுக்கணக்கான பண்டிதர்களும், தோழர்கள் உத்தமபாளையம் சோமசுந்தர முதலியார் போன்ற 500 மிராசுதார்களும், முத்து நாடார், ஆரியா, கண்ணப்பர், முருகப்பா தாயுத்ஷா போன்ற நூற்றுக்கணக்கான பத்திராதிபர்களும், தோழர் நாயகம் போன்ற 600, 700 பெண்மணிகளும், அநேக பிரமுகர்களும், செட்டிநாட்டிலிருந்து வை. சு. சண்முகம், சொ. முருகப்பா, அருணாசலம் முதலிய நாட்டுக்கோட்டை கனவான்களும், தோழர்கள் பண்டிட் ஆனந்தம், சாமி சகஜானந்தர், கோவை வீரய்யா, மதுரை பிள்ளை சிவாராஜ் முதலிய கொடுமைப் படுத்தப்பட்ட வகுப்பு 400, 500 பிரதிநிதிகளும், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், கோவை முதலிய தமிழ் ஜில்லாக்களிலிருந்து ஜில்லாவுக்கு 400, 500 பிரதிநிதிகளுக்குக் குறையாமல் சில ஜில்லாக்களில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் பல ஜில்லாக்களிலிருந்தும் ஸ்திரீகள் பிரதிநிதிகளாக சுமார் 600, 700 சீமாட்டிகளும் தொழிலாளிகளில் பல பாகங்களிலிருந்தும் சாமியுல் நடேச முதலியார் காளியப்பன் போன்ற சுமார் ஆயிரம் தொழிலாளிகளும் புதுச்சேரியிலிருந்து தோழர் ராஜகோபால் தலைமையில் 40, 50 பிரதிநிதிகளும், திருவாங்கூரிலிருந்து 40, 50 பிரதிநிதிகளும், மைசூரிலிருந்து மைசூர் சட்டசபை மெம்பர் தோழர் நீலகிரி சஞ்சீவப்பா தலைமையில் 20, 30 பிரதிநிதிகளும், மற்றும் லாகூர், பம்பாய்; கல்கத்தா, மத்திய மாகாணம் முதலிய இடங்களிலிருந்து பல பிரதிநிதிகளும், மலேயா நாட்டிலிருந்துசரோஜினி ஓட்டல் சொந்தக்காரர் தோழர் எஸ். ராஜு அவர்கள் தலைமையில் 10, 20 பிரதிநிதிகளும், மற்றும் ஆந்திராவிலிருந்து தோழர் சி. வி. ரெங்கம் செட்டியார் கதருடனும் பல பிரதிநிதிகளுடனும் மற்றும் ஒத்துழையாமையில் ஈடுபட்டு ஒரு வருஷம், இரண்டு வருஷம், மூன்று வரு

ஷம், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து தடவை சிறைசென்றவர்களும் ஒத்துழையாமையை ஒழிக்க ஏற்பட்ட சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர்களும்காங்கரஸ் மிதவாதம்-அமிதவாதம்-பெசண்ட் கோஷ்டி—ஜஸ்டிஸ் கட்சி ஆகிய பிரிவுகளைச்சேர்ந்தவர்களும் முழு சுதந்திரம் வேண்டுபவர்களும், பார்ப்பனர்களும், மகமதியர்களும், கிறிஸ்தவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும்,சைவசமாஜக்காரர்களும், வைணவ சமயக்காரர்களும், பவுத்த சமயத்தார்களும், ஆரிய சமாஜிகளும், பிரம்மஞான சங்கக்காரர்களும் வெள்ளைக்காரரும், வெள்ளைக்கார பாதிரிகளும், வெள்ளைக்கார மாதுகளும், பத்திராதிபர்களும் மேல் கண்ட துறைகளில்ஈடுபட்டு பிரசாரம் செய்யும் தொண்டர்களும் பண்டிதர்களும், புராணபிரசாரர்களும், சன்யாசிகளும், சாமியார்களும் கோவில் டிரஸ்டிகளும் இந்து ரிலிஜியஸ்போர்ட் தலைவர்கள் கமிஷனர்கள், தேவஸ்தானக் கமிட்டித் தலைவர்கள், அங்கத்தினர்கள், டிரஸ்ட்டிகள், குருமார்கள், அர்ச்சகர்கள்—சர்க்கார் நிர்வாக அதிகாரிகள் சர்க்கார் காரியதரிசிகள் உத்தியோகத்திலிருக்கும் ஜில்லாஜட்ஜி, சப் ஜட்ஜிகள், ஸ்மால் கோர்ட் ஜட்ஜிகள், கலெக்டர்கள், டிப்டி கலெக்டர்கள் மற்றும் மாதம் 1000, 2000 ரூபாய் பெரும் உத்தியோகஸ்தர்கள், சில்லரை உத்தியோகஸ்தர்கள் ராஜாக்கள், ஜமீன்தார்களும், குடியானவர்களும், கூலிக்காரர்களும் பெண்களில் மாங்கல்ய ஸ்திரீகள் என்பவர்களும், விதவைகள் என்பவர்களும், கன்னிகைகள் என்பவர்களும், தாசிகள் என்பவர்களும், மற்றும் எல்லாப் பிரிவுக்காரர்களும் பிரதிநிதிகளாய் வந்திருந்தது இதில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கதாகும்.

(இன்றைய சுயமரியாதை இயக்கம் "யாருடைய கைக்கு வந்துவிட்டது" என்ற கேள்விக்கு திருச்சி மாநாடு பதிலுரைக்கும்)

---

**காரைக்காலில் 16-9-45-உ அன்று தளபதி சி. என். ஏ. தலைமையில் நடக்கவிருந்த திராவிடர் கழகத் திறப்பு விழா திருச்சி மாநாடுகட்குப் பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.**

ரோஜா முத்தையா

# திருச்சியில் தீர்மானித்தவை!

(சென்ற இதழின் தொடர்ச்சி)

**4. சேலம் தீர்மானம்:**

"கால நிலைமையையும், உலகப் போக்கையும், சர்க்கார் நிலையையும், நம்மக்கள் தன்மையையும், இதுவரை நாம் நடந்து வந்ததன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தையும், அதனால் உண்டான பலனையும் மற்ற ஸ்தாபனங்களுக்கும், சர்க்காருக்கும் இருந்துவரும் நிலைமையையும் அதனால் அவைகளுக்கு ஏற்பட்ட பலனையும் நன்றாக, ஜாக்கிரதையாக, ஆலோசித்துப் பார்த்தால் நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும், நமது கட்சியின் பேரால் இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்து வரும் போக்கை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக்கொண்டு போகப்பட்டு விட்டோம்.

அதாவது,

நம் கட்சி தோன்றிய காலம் முதல் இதுவரை நாம் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து வந்ததும், சர்க்காருடன் ஒத்துழையாமை செய்து சர்க்காருக்குத் தொல்லை கொடுத்து வந்த ஸ்தாபனங்களை எதிர்த்துப் போராடி சர்க்காருக்கு அனுகூலமான நிலைமையை உண்டாக்க உதவி செய்து வந்ததும், குறிப்பாகச் சென்ற ஐந்து வருஷ காலமாக நடந்து வரும் உலகயுத்தத்தில் நல்ல நெருக்கடியில் நேசநாடுகளின் வெற்றிக்குக் கேடு உண்டாகும்படியான நிலையில் நம் நாட்டில் பல ஸ்தாபனங்கள் செய்து வந்த பெருங் கிளர்ச்சிகளையும் நாசவேலைகளையும் எதிர்த்து அடக்குவதிலும் நேசநாடுகளுக்கு வெற்றி உண்டாகப் பணம், ஆள், பிரசாரம்முதலியவைகள்நிபந்தனையின்றி சர்க்காருக்கு உதவி வந்ததும் சர்க்காராலும் பாமர மக்களாலும் நம் கட்சியை இழிவாகக் கருதப்படத்தக்க நிலை ஏற்படுவதற்கும் பயன்பட்டு விட்டது.

இந்திய அரசியல் சமூக இயல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சர்க்காரார் நம் கட்சியையும், நம் இலட்சியமாகிய திராவிடநாட்டுப் பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள்.

இந்திய மக்களின் அரசியல், சமுதாய இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களில் நம் ஸ்தாபனம் குறிப்பிடத்தக்கதாகவும், நீதி நெறி உடையதாகவும் இருந்து, ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டு சர்க்கார் மெச்சும்படி நடந்துவந்ததும், நம் ஸ்தாபனம் சர்க்காரால் மற்ற சாதாரண ஸ்தாபனங்களோடு ஒன்றாகக்கூட சேர்த்துப் பேசுவதற்கில்லாததாக அலட்சியப் படுத்தப்பட்டது.

மாகாண கவர்னராலோ, கவர்னர் ஜனரலாலோ, இந்தியா மந்திரியாலோ, பிரிட்டிஷ் முதல் மந்திரியினாலோ, இந்திய அரசியல் கட்சிகளைப்பற்றிப் பல தடவை பேச ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்று இரண்டு தடவைகூட நம் சமுதாயத்தையோ, நம் ஸ்தாபனத்தையோ, நம் இலட்சியத்தையோ குறிப்பிட கட்டுப்பாடாய் மறுத்தே வரப்பட்டிருக்கிறது.

ஆகவே இப்படிப்பட்டநிலைமை மாறி நம் கட்சி நிலை மதிக்கப்படவும், குறிப்பிடப்படவும் மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படவும், நம் கட்சி இனியும் கட்டுப்பாடும் உரமும்பெற்று உண்மையான தொண்டர்களைக் கொண்டு நாணயமாயும் தீவிரமாயும் தொண்டாற்றி மதிப்புப் பெறவும் நல்ல வசதியும் சவுகரியமும் ஏற்படுவதற்கு நம் கட்சிக்கு அடியில் கண்ட திட்டம் உடனே அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டியது அவசியமும் அவசரமும் ஆன காரியமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

அ. நம் கட்சியில் இருக்கும் அங்கத்தினர்களும் இனியும் வந்து சேர இருக்கும் அங்கத்தினர்களும் சர்க்காரால் தங்களுக்கு அளிக்கப்பட்ட எந்தவிதமான கவுரவப் பட்டங்களையும் உடனே சர்க்காருக்கு வாபசு செய்துவிட வேண்டும், இனி ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

ஆ. அதுபோலவே அவர்கள் யுத்தத்திற்கு ஆகவும் மற்றும் சர்க்கார் காரியங்களுக்கு ஆகவும், மத்திய சர்க்காராலோ, மாகாண சர்க்காராலோ எந்தவிதமான கமிட்டியில் எப்படிப்பட்ட கவுரவ ஸ்தானம், அங்கத்தினர் பதவி, ஆலோசகர் பதவி அளிக்கப்பட்டிருந்தாலும் அவைகளையெல்லாம் உடனே இராஜிநாமாச் செய்துவிட வேண்டியது.

இ. தேர்தல் அல்லாமல் ஸ்தலஸ்தாபனம் அதாவது ஜில்லா போர்டு, முனிசிபல் சபை, பஞ்சாயத்து போர்டுஆகியவைகளின் தலைவர் உபதலைவர் அங்கத்தினர் ஆகிய பதவிகளில் சர்க்காரால் நியமனம் பெற்ற அல்லது நியமனம் பெற்று அங்கத்தினரால் தேர்தல் பெற்றோ இருக்கிறவர்கள் யாவரும் தங்கள் தங்கள் பதவிகளை உடனே இராஜிநாமாச் செய்துவிட வேண்டியது.

ஈ. சர்க்காரால்தொகுதி வகுக்கப்பட்ட எந்தவிதமான சட்டசபைத் தேர்தலுக்கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக் கூடாது என்பதோடு அத்துடன் எவ்வித சம்மந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது.

இதை ஏற்று ஒரு வாரத்தில் இதன்படி கட்டுப்பட்டு நடக்காதவர்கள் எவரும் தங்களுக்கு இக்கட்சியில் இருக்க இஷ்டமில்லை என்று கருதி கட்சியை விட்டு

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# பெறுவோம் திராவிட நாடு!

## எதிர்கால வாழ்வு நாட்டுப் பிரிவினையில் தான் !

[திருச்சியில் 29-9-45ல் நடந்த திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) 17வது மாகாண மாநாட்டைத் திறந்துவைத்த பழயகோட்டை இளைய பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் ஆற்றிய சொற்பெருக்கு]

தோழர்களே!

வணக்கம், மாநாட்டின் நிகழ்ச்சிக் குறிப்பின்படி இப்பொழுது நடக்க வேண்டிய காரியம் மாநாட்டுத் திறப்பு. இம் மாபெரும் பணியை எனக்களித்து கௌரவித்த இம்மாநாட்டு நிர்வாகிகளுக்கும் உங்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாநாடு இந்நாட்டில் சரித்திரத்தில் மிக முக்கியமான இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், உலகில் இன்று எல்லா நாடுகளும் எதிர்காலத்தைக் குறித்து அதாவது தத்தம் நாட்டு அமைப்பு முறையையும் கொள்கையையும் வகுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் எந்த நாடு ஏமாந்து போகிறதோ, எந்நாடு கவலையற்றதனமாக இருக்கிறதோ அந்நாடு ஒருநாளும் தலையெடுக்க முடியாதென்பது நிச்சயம். அப்படியிருக்க, நாம் மட்டும் வாளாயிருக்கமுடியுமா? நமது எதிர்காலத்தைக் குறித்துச் சிந்திக்காமலிருக்க முடியுமா? என்பதை எண்ணிப் பாருங்கள். ஆகவேதான், நான் இம்மாநாடு சரித்திரத்திலே முக்கிய இடம் பெறும் என்று கூறுகிறேன்.

நமது எதிர்கால வாழ்வு நமது நாட்டை, திராவிடநாட்டைத் தனி நாடாகக் காண்பதில்தானிருக்கிறது. திராவிடநாடு தனிநாடாகப் பிரிக்கப்படாவிடில் நாம் என்றும் மனிதராகவே வாழமுடியாது. நமது சமுதாய நிலையோ, பொருளாதார நிலையோ ஒருநாளும் உயரப்போவதுமில்லை, மாறப்போவதுமில்லை. இவை இரண்டும் ஏற்படாதவரை நாம் என்றாவது மானத்தோடு வாழமுடியுமா என்று எண்ணிப் பாருங்கள்.

நம்நாடு என்று சமுதாயத் துறையில் ஆரியத்துக்கும், அரசியல் துறையில் வடநாட்டானுக்கும் அடிமையாயிற்றோ அன்றுமுதல் இன்றுவரையுள்ள சரித்திரத்தை-நிலையை ஆராய்ச்சி செய்துபார்த்தால், நம்நாடு க்ஷீண திசையடைந்துவந்திருப்பதையே காணலாம். மக்கள் வாழ்வு கெட்டுப் பாழடைந்து வந்திருக்கிறார்கள். இந்நாட்டில் பிழைக்க வழியில்லாது வெளிநாடு சென்று பிறர் கொழுக்க உழைத்து விலங்கினும் கேடாய் உழல்கின்றனர். வறுமைக்கடலில் மூழ்கி மீளாத்துயரத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அவர்களுக்கு நம்மால் ஒரு உதவியும் செய்யமுடியாமல் நாம் இருக்கின்றோம். தென்னாபிரிக்காவிலானாலும் சரி, மலாயாவிலானாலும் சரி, வேறு எங்கு ஆனாலும் சரி தமிழர்கள் தான் கஷ்டப்



என். அர்ச்சுனன்

படுகிறார்கள். எங்குபார்த்தாலும் தமிழர்கள் தான் ஆடுமாடுகளைப்போல் துரத்திச் செல்லப்படுகிறார்கள். கும்பல் கும்பலாக மாண்டுமடிகிறார்கள். ஏனென்று கேட்பதற்கு நமக்கு உரிமையில்லை. ஏன்? அந்நிலையில் நாம் இல்லை. நமக்கென ஒரு இடம், நமக்கென ஒரு நாடு, நமக்கென ஒரு ஆட்சியிருந்தாலல்லவோ நாம் என்ன செய்தி என்று கேட்க முடியும்; கேட்கவேண்டும் என்ற அக்கரையும் ஏற்படும்? மற்றவர்களுக்கு என்ன கவலை? அவர்கள் ஏன் கேட்கிறார்கள்?

மலேயா, சிங்கப்பூர், சிலோன், தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் கஷ்டப்படும் நம் மக்களின் தொகை எவ்வளவு? எத்தனை லட்சங்கள் இருக்கும்? இவ்வளவு பேர்களும் ஏன் இவ்வாறு கஷ்டப்படவேண்டும்? அவர்களுக்கு இந்நாட்டில் பிழைக்க வழியில்லையா? நமது நாட்டிலிருந்து வடநாட்டானும் அன்னிய நாட்டானும் கோடிக்கணக்கில் கொள்ளைகொண்டு போகும் போது இவர்களுக்கு வழியில்லையென்று சொல்லிவிட முடியுமா? வழியிருந்தும் இந்நிலைமை ஏன் என்றால் அவ்வழி அடைக்கப்பட்டிருக்கிறது; அதைத் திறந்து விடவே நாம் இன்று முயலுகிறோம்; அம் முயற்சியில் நீங்களும் பங்குகொள்ள வேண்டும் என்பதுதான் என்போன்றார்களின் ஆசை.

திராவிட நாடு தனி நாடாகப் பிரிந்தால் நாம் தனித்து வாழமுடியுமா? நமது அரசாங்கம் தனித்து இயங்க முடியுமா? நமது பொருளாதார நிலை அதற்கு இடம் கொடுக்குமா? என்று யாரும் கருதவேண்டியதில்லை. இதைக் குறித்து 'குடி அரசு' எழுதியிருக்கிறது. பெரியார் அவர்களும் பலமுறை விளக்கிப் பேசியிருக்கிறார்கள். 'திராவிடநாடு' இதழில் இரண்டு வாரங்களுக்கு முன் முகப்புப் பக்கத்தில் வந்த படமும், அதன்விளக்கமும் இந்தச் சந்தேகத்தைத் தெளிவுபடுத்தியிருக்குமென்று நம்புகின்றேன். நமக்குப் பக்கத்தில் புதுச்சேரி, காரைக்கால், மாஹி, சந்திரநாகூர் போன்ற சிறுசிறு ஊர்கள் தனி அரசாங்கமாக விளங்கி வருவதையும், மைசூர், திருவிதாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, ஹைதராபாத் முதலிய இராச்சியங்கள் தனித்தனியாகத் தங்கள் தங்கள் நிர்வாகத்தைத் தனித்து கவனித்து வருவதையும் பார்க்கிறோம். ஐரோப்பாவில் நமது ஜில்லா அளவு ஜனத்தொகையுடைய நாடுகளும் ஒரு கோடி, இரண்டு கோடி ஜனத்தொகையுள்ள நாடுகளும் தனித்தனி நாடுகளாக விளங்கி வருவதையும், அவைகளின் தனி உரிமையை சுதந்திரத்தைக் காக்கவே இன்றைய மகாயுத்தமும் நடைபெற்றதையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அப்படியிருக்க திராவிடநாடு தனி நாடாக பலநூற்றாண்டுகளாக, ஏன், பல ஆயிரம் ஆயிரமாண்டுகளாக விளங்கி வந்திருக்கிறது. அதுவும் சமீபகாலமாகத் தனிநாடாக இருந்து வந்திருக்கிறது என்பதற்குச் சரித்திரம் நமக்குச் சான்றளிக்கிறது. நமது கலை, மொழி, நாகரீகம் முதலியவைகள் வேறு; வடநாட்டுக்கலை, மொழி, நாகரீகம் வேறு. வடநாட்டுக் கலை, மொழி, நாகரீகத்திற்கும், மேற்கு நாட்டுக் கலை, மொழி, நாகரீகத்திற்கும் வேண்டும் என்றால் ஏதாவது ஒரு வகையில் கலப்பு, அதாவது சம்பந்தம் கற்பிக்கலாமேயல்லாது, திராவிடர் கலை, மொழி, நாகரீகத்திற்கும், ஆரியக் கலை, மொழி, நாகரீகத்திற்கும் சம்பந்தம் கலப்பு இருப்பதாக எவராலும் சொல்ல முடியாது. ஆக இந்நிலையிலுள்ள நாம் ஏன் தனித்து வாழ முடியாது என்பதையும் தனித்து வாழ்ந்தால்தான் நம் நிலை உயர்வடைய முடியும் என்று பெரியார்

அவர்கள் கூறுவதில் என்ன தப்பு என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்கக் கோருகிறேன்.

அடுத்தபடியாக, நம் நாடு அந்நியர் சுரண்டுதலிலிருந்து விடுதலை யடைய வேண்டுவது மிக மிக அவசியமாகும். அந்நியர் சுரண்டல் என்றால், பிரிட்டிஷார் மட்டுமல்ல, வடநாட்டார் சுரண்டலிலிருந்தும் விடுபட வேண்டும். இரண்டுபேர்களுடைய சுரண்டுதலும் ஒன்றுதான். ஒன்றைவிட ஒன்று மேலென்றோ கீழ் என்றோ சொல்வதற்கில்லை. இரண்டும் ஒழிக்கப்பட வேண்டியவைகளே. வெளி நாட்டான் சுரண்டுதல் இருக்கும் போதே வடநாட்டான் சுரண்டுதலும் ஆரம்பமாகிவிட்டது. இனி வரப்போகும் காலம்தொழிற்சாலைகள் காலம். இந்நாட்டிலே தொழிற்சாலைகள் பெருகப் போகின்றன. இதுவரை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்கள் இனி இங்கே உற்பத்தியாகப்போகின்றன. இதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அவ்வாறு ஏற்படும் தொழில்கள் எல்லாம் வடநாட்டான் ஆதிக்கத்தில் போய் விட்டால் நம் நாட்டுக்கு என்ன பயன் ஏற்படப்போகிறது என்பதை எண்ணிப்பாருங்கள். உதாரணமாக இந்நாட்டிலுள்ள விமான உற்பத்தி நிலையமும் கப்பல் கட்டும் தொழிலும் வடநாட்டான் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. போதாக் குறைக்கு மோட்டார் உற்பத்தித் தொழிலும் வடநாட்டான் கைக்கே போய்விட்டது. அமெரிக்காவிலுள்ள ஸ்டுடிபெக்கர் மோட்டார் உற்பத்தியாளர் இந்தியாவிலுள்ள பிர்லா சகோதரர்களின் ஹிந்துஸ்தான் மோட்டார் உற்பத்தித் தொழில் நிலையத்தாருடன் ஒப்பந்தம் செய்திருக்கிறார்களென்று தெரிகிறது. இனி இந்தியாவில் இவர்கள் தொழிற்சாலையிலே ஸ்டுடி பெக்கர் மோட்டார் உற்பத்தி செய்வார்கள். இவர்கள் கோடீஸ்வரர்கள் ஆவார்கள். இதற்கு வழி ஏற்பட்டது. நம் நாட்டு-திராவிட நாட்டு நிலை என்ன? அன்றுபோல் இன்றும் என்றும் சுரண்டப்படும் நிலைதான். இதில் மாற்றம் இல்லை.

இம்மாதிரியான நிலையில் இருக்கப் பிரியப்படுகிறீர்களா? உங்களையே நீங்கள் பாதுகாத்துக்கொள்ளப் பிரியப்படுகிறீர்களா? என்பதுதான் இன்று உங்கள் முன்னுள்ள பிரச்சினை. இதற்கு ஒரே ஒரு வழி, திராவிடநாட்டைத் தனிநாடாகப் பிரிப்பதே. இதைத் தவிர நமக்கு வேறு பிரச்சினை எதுவும் இல்லையென்று நீங்கள் ஒவ்வொருவரும் உறுதிகொள்ள வேண்டும். இன்றைய நாளில் நாட்டில் வாலிபர்களிடத்திலும், இப்பந்தலிலும் நான் காணும் காட்சியே போதும், உங்கள் உறுதியை விளக்குவதற்கு. இவ்வுறுதி

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

22-9-45 வரை சேர்ந்த அங்கத்தினர் தொகை 33984
சந்தா வரவு ரூ. 3374-10-0

6-10-45 வரை சேர்ந்துள்ள அங்கத்தினர் தொகை 34101
சந்தா வரவு ரூ. 3388-12-0

### பிறப்பு

தஞ்சைத் தோழர்கள் எம். கணபதி—தனலெட்சுமி தம்பதிகளுக்கு 10-9-45-ல் பெண் மகவு பிறந்து 'மணிமேகலை' என்றுபெயரிட்டு அதன் நினைவாக "குடி அரசு"க்கு 1 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

பொன்மலைத் தோழர்கள் சேதுராமன்--புஷ்பகாந்தம்மையார் தம்பதிகளுக்கு ஆண் குழந்தை பிறந்து 'இராவணன்' என்று பெயரிட்டதன் நினைவாகக் 'குடி அரசு', 'திராவிட நாட்டு'க்கு முறையே 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

---

இம் மாநாட்டுப்பந்தலுடன் நின்று விடாமல் இம்மாநாட்டில் வகுக்கும் வேலைத் திட்டத்தை அமுல் நடத்துவதில் நீங்கள் அதைக் காட்டவேண்டும். அதைப் பொறுத்துதான் நமது எதிர்கால வாழ்வுஇருக்கிறது. பெரியார் அவர்கள் தலைமையில்நாம் உறுதியுடன் நின்று ஒரே முன்னணியில் நமது கோரிக்கையை வெளியிட்டால் நமது இலட்சியம் வெகு விரைவில் கைகூடும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. பெறுவோம் திராவிட நாட்டை. உறுதி! உறுதி!! உறுதி!!!

வாழ்க திராவிடநாடு!

வாழ்க நம் பெரியார்!!

## நடக்க இருப்பவை!

1 10-10-45 புதன்கிழமை மாலை 5-மணிக்கு ஈரோடு திராவிட மாணவர் கழகக் கட்டிடத்தில் திராவிட மாணவர் மாகாண மாநாட்டு வரவேற்புக் கழகக் கூட்டம் நடைபெறும். மாநாட்டு வரவேற்புக் கழக உறுப்பினர், தேர்ந்தெடுப்பதோடு, மாநாடு நடத்த இடமும், நாளும் அழைக்க இருக்கும் தலைவர்களும் நிர்ணயிக்கப்படும். மாணவத் தோழர்கள் இதனையே அழைப்பாகக் கொள்க!

2. 18-10-45 ல் பழையகோட்டை இளைய பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் தலைமையில் கல்வார்பட்டி இல்வச வாசகசாலை ஆண்டுவிழா நிகழும். தோழர் கே. வி. அழகிரிசாமி, மற்றும் பலரும் பேசுவார்கள்.

3. 15-10-45 மாலை 7-மணிக்கு அகரம் பெரிய சேரியில் தங்கவயல் மாஜி 'தமிழன்' ஆசிரியர் ஜி. அப்பாதுரையார் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். பல அறிஞர்கள் பேசுவார்கள்.

4. நிலக்கோட்டை தாலூக்கா தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரை மாற்றி திராவிடர் கழம் என அமைப்பதைப்பற்றியும் மதுரை ஜில்லா திராவிடர் மாநாடு மேற்படி தாலூக்காவில் நடத்துவது பற்றியும் யோசிக்க 4-10-45 ல் நிலக்கோட்டை கருப்பட்டி பேட்டையில் கூட்டம் நடைபெறும். அங்கத்தினர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

### வருகிறார்!

அக்டோபர் 10-ந் தேதிக்குமேல் தோழர் எஸ். தங்கமணிஇராசன் திராவிட மாணவர் மாகாண மாநாட்டு நிதி திரட்டுவதற்காகப் பல ஊர்களுக்கும் வருவார். இயக்கத் தோழர்களும் மாணவத் தோழர்களும் ஆக்கத்துடன் ஊக்கமளிக்க வேண்டுகிறோம்.

இரா. இளம்வழுதி,
வரவேற்புக்கழகச் செயலாளர்

---


## திராவிடத் தலைவர்—தளபதி

அவர்களுடைய பிளாக்குகள் எங்கள் பதிப்பகத்தில் வெளிவந்துள்ளன. திராவிடத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடையவும், திராவிடத் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்களுடைய உருவமைந்ததும், நீதிக் கொடியும், அதனுள் திராவிடத் தலைவர்—திராவிடத் தளபதி என்று பொறிக்கப்பெற்ற எழுத்துக்களும் மிகவும் அழகாக அமைந்துள்ளன.

லெட்டர் பேப்பர், போஸ்டு கார்டு, போன்றவைகளில் அச்சிட்டு உபயோகித்துக்கொள்ள அந்தந்த நண்பர்களுக்கு ஏதுவாயிருக்குமென மகிழ்ச்சியுடன் நினைக்கின்றோம். ஒன்றின் விலை ரூ. 2-0-0.

வியாபாரத்திற்கு நல்ல சலுகை காண்பிக்கப்படும்.

விபரங்கட்கு:

திராவிடன் பதிப்பகம், தபாற்பெட்டி 18, வேலூர் வ. ஆ.

# "தராசு புரட்சிச் சின்னமல்ல"

## அடைவோம் திராவிட நாடு; இன்றேல் சுடுகாடு!

‡

[திருச்சியில் 29-9-45 அன்று நடைபெற்ற திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) 17வது மாகாண மாநாட்டில் கொடிஉயர்த்திய தோழர் மிராண்டா கஜேந்திரன் B.A., ஆற்றிய சொற்பொழிவு.]

வரவேற்புக்கழகத் தலைவர் அவர்களே! அறிவிற் சிறந்த பிரதிநிதிகளே!! பெரியோர்களே!!! தோழர்களே!!!! வணக்கம்.

மாபெருந் தலைவர்களான டாக்டர் நாயர், சர் தியாகராயர், பனகால் அரசர், பொப்பிலி அரசர் ஆகியவர்களால் போற்றப்பட்டு வந்ததும், இன்று நமது மாண்புமிக்க தந்தையார் அவர்களால் காப்பாற்றப்பட்டு வருவதுமான தராசுக் கொடியை திராவிடர்களின் பதினேழாவது மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கப் பெறும் இவ்வேளையில் உயர்த்திவைக்க என்னைப் பணித்த வரவேற்புக் குழுவினர்க்கு எனது மனமுவந்த நன்றியைச் செலுத்திக்கொள்கிறேன். இக்கொடியை உயர்த்தும் பேறு எனக்குக் கிடைத்திருப்பதன்மூலம் திராவிடர் இயக்கம் இளைஞர்களால் ஆதரிக்கப்படுறது என்பது விளங்குகிறது; ஆகவே இயக்கக் கொள்கைகள் நாட்டிலே, மக்களிடையே வேரூன்றி விட்டிருக்கின்றன என்பதும் நிரூபிக்கப்படுகிறது.

எத்தகைய கொள்கைகளுக்காக ஜஸ்டிஸ் கட்சியானது உலக முதல் மகா யுத்தத்தின் போது ஆரம்பிக்கப்பட்டது என்றால், திராவிட மக்களுக்கு வெகு காலமாய் இருந்துவரும் சமுதாயக் குறைபாடுகளும், முன்னேற்றத் தடைகளும், தாழ்வுகளும் நீக்கப்பட்டு மற்ற மக்களைப் போல் சரி சமமான நிலை பெறவே யாகும். அதற்காக நமது கட்சி இந்த இருபது ஆண்டுகளாக எவ்வளவோ பாடுபட்டும் நாம் நம் லட்சியத்தை அடையமுடியாமல் போனதால், இன்று நம் லட்சியத்திற்கு முக்கிய திட்டமாக திராவிட நாடு திராவிடரின் சர்வ சுதந்திர நாடாக ஆக வேண்டியதென்று முடிவு செய்து கொண்டு அதற்காகத் தொண்டாற்ற முனைந்துவிட்டோம். அத்தொண்டின் வேலை முறைகளை வகுக்க இம்மாநாடு கூடியிருக்கிறது. அந்த லட்சியம் கைகூடும்வரை திராவிடக் கொடியின் கீழ் உறுதியோடு, எவ்வித கஷ்டநஷ்ட சந்தர்ப்பங்களிலும் பின்வாங்காமல் நாம் யாவரும் உழைக்க கச்சைகட்டி முன் நிற்கிறோம் என்பதைக் காட்டவே இன்று இக்கொடி உயர்த்தப்படுகிறது.

திராவிட மக்கள் என்பவர்களில் ஒரு சில படித்தவர்களும், பணக்காரர்களும் சட்டசபை உறுப்பினர்களாவதற்காகவோ, சமூக இயலில் நம்முடைய மக்கள் இழிநிலையில் வைக்கப்பட்டுள்ள களங்கத்தை மாற்றாது, அரசியலில் மட்டும், ஒரு குறிப்பிட்ட உயர்ஜாதியாரை மட்டும் எதிர்ப்பதற்காகவோ, அல்லது காய்வதற்காகவோ, இத்தனை நாட்கள் இக்கொடி பயன்படுத்தப்பட்டு வந்தது போல இனியும் இது பயன்படுத்தப்பட்டு வரவேண்டுமென்பதுதான் சரி என்று கொள்ளப்படுமானால், இக்கொடி உயர்த்தப்படுவதைக் காட்டிலும், கிழித்தெறிப்படுவது மேல், என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும்.

சமுதாய ஊழல்கள் ஒழிந்துபடவும், திராவிடரும் ஆறறிவு படைத்தவராக வாழவும், நமது இயக்கத்தை நடத்துவிக்கும் கொடியை உயர்த்துவதால் ஏதாவது நல்லதோர் வழி ஏற்படவேண்டும்.

நம்முடைய கொடியில் இருக்கும் செங்குருதிபொத்த நிறத்தை நான் வரவேற்கின்றேன். ஆனால் அதனிடையே பொறிக்கப்பட்டுள்ள 'தராசு' சின்னத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நாம் வேண்டுவது தலைகீழ் மாறுதல்—புரட்சி. இன்னல்செயும் ஆரியத்தை சின்னாபின்னமாக்க ஓர் சின்னம் தேவை. தராசு புரட்சியைக் குறிக்கும் சின்னம் ஆகாது. தலைகீழ் மாறுதல் வேண்டி நிற்கும் எதிர்கால ஆக்க இளைஞர் உணர்ச்சிக்கு இந்தத் தராசு எந்த விதத்திலும் ஓர் அறிகுறியோ, அல்லது வழிகாட்டியோ, அல்லது துணையோ ஆகாது,

எனவே, நீங்களனைவரும் இது விஷயமாய் நெடிது நேரம் விவாதித்து, விசாரணை செய்து, புத்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

வெற்றியடைந்தவுடன்

மே. த. கவர்னரின்

"துருப்புகளின் உதவி நிதியானது" "சௌகரிய, உதவி நிதி" என்று ஏற்பாடாகியிருக்கிறது

இந்த மாறுதல் குறிப்பிடத்தக்கதாகவும், தேவை மிக அதிகமாகவும் இருக்கிறது.

★

எனவே

"சௌகரிய, உதவி நிதிக்கு" என்று குறிப்பிட்டு

"ஹானரரி டிரஷரர், கவர்னர் போர் நிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா, சென்னை" என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பிக்கொடுக்கவும்.

ரோஜா முத்தையா

குடி அரசு

1945-ளு அக்டோபர் மீ 6வ

# திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள்

திருச்சிமாநாட்டு நடவடிக்கை பற்றிச் சென்றவாரம் குறிப்பிட்டு இருந்தோம். இவ்வாரம் தீர்மானங்களைப்பற்றி விளக்குவதாகக் குறிப்பிட்டிருந்தபடி விளக்குவோம். முதலாவதாகக் கழக விதி முறை சம்பந்தமாகப் பல திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

அவற்றில் கழக லட்சியத்தை அதாவது இதற்குமுன் கழக லட்சியமாக (கொள்கையாக) இருந்து வந்த விதிமுறைகளில் (பெரியார் ஜஸ்டிஸ் கட்சித் தலைவராக ஆவதற்குமுன்) நீதியும் சமாதானமுமானமுறையில், இந்தியாவிற்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சுயராஜ்யம் பெறவேண்டும் என்பதாக கட்சியின்லட்சியம்இருந்துவந்தது. பெரியார் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக வந்ததும் முதல் மாநாட்டிலேயே(1938-ல்)இந்தியா பூர்ண சுயேச்சை அடைய பாடுபடவேண்டியது என்பதாகத் திருத்தப்பட்டது. இப்போது திருச்சி மாநாட்டில்இந்தியாஎன்கின்றவார்த்தையே எடுக்கப்பட்டு,

திராவிடநாடு அரசியல், சமுதாயம், பொருளாதாரம், தொழில் துறை, வியாபாரம் ஆகியவற்றில் பூர்ண சுதந்திரமும், ஆதிக்கமும் பெறவேண்டும் என்பதாகவும்,

திராவிட நாடும், திராவிட நாட்டு மக்களும் திராவிட நாட்டவரல்லாத அந்நியர்களின் எந்தவிதமான சுரண்டல்களிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் விடுபடுத்தப்பட்டு காப்பாற்றப்பட வேண்டும் என்றும்,

திராவிட நாட்டு மக்களிடத்தில் சமயம் சமயாசாரம் பழக்க வழக்கம் என்பவைகளின் பேரால் இருந்துவரும் பேத உணர்ச்சி மூடநம்பிக்கை ஆகிய இவைகள் மறையச்செய்து மக்களைத் தாராள நோக்கமும், நல்ல அறிவு வளர்ச்சியும் பெற்ற, ஒன்றுபட்ட சமுதாயமாகச் செய்யவேண்டும் என்றும்,

இவைகள் வெற்றி பெறுகிறவரை ஜாதி, சமயம், வகுப்பு பேதம் ஆகியவை உள்ள மக்களுக்கு நம்மிடம் (கழகத்தாரிடம்) முழு நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்பட்டு மேற்கண்ட முயற்சிகளுக்கு நம்மோடு களங்க மற்று ஒத்துழைக்க வேண்டிய அவசியத்திற்காக அவர்களுக்கு எண்ணிக்கை, அவசியம் ஆகியவைகளுக்குத் தக்கபடி முக்கியமான துறைகளிலெல்லாம் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்றும்,

திருத்தப்பட்டிருக்கிறது.

உண்மையில் பேசப் போனால் ஜஸ்டிஸ் கட்சியானது துவக்கப்பட்ட காலம் முதல் பெரியார் கைக்கு வந்த காலம் வரை இடையிலுள்ள இருபது ஆண்டுகளைப் பெரிதும் மேற்கண்ட கொள்கைப்படி வெற்றி பெற மக்கள் பாடுபட்டிருந்தால் இப்பொழுது திராவிட மக்களின் நிலை எவ்வளவோ பாராட்டத் தகுந்த உச்ச நிலையை அடைந்திருக்கும். உதாரணமாகப் பெரியார் தலைமைக்கு வந்தது முதல் ஒரு இரண்டு மூன்று ஆண்டுகளில் திராவிட மக்கள் உள்ளத்தில் நாடு, சமயம், சமுதாயம், பழக்கவழக்கம், பொருளாதாரம், அரசியல், சுரண்டல் ஆகிய இவைகளில் மற்ற மாகாணத்தாரும் நம்மைப் பார்த்துக், கைக்கொண்டு பின்பற்றும் வண்ணம் எவ்வளவோ உணர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம். ஆகவே, ஜஸ்டிஸ்கட்சியின் சரித்திரம் துவக்கம்முதல் ஒரு இருபது வருடகாலம் இத்துறைகளில் தக்க வேலை செய்யவில்லை என்றுதான் ஏற்பட வேண்டியிருக்கிறது.

படித்தமக்களுக்கும், உத்தியோகம்,பதவிகளில் பற்றுள்ளவர்களுக்கும்,பணம்பெருக்கும் ஆசையுள்ளவர்களுக்கும்நம்மில் இருக்கும்இக்குறைபாடுகள்எளிதில்தோன்றாது தோன்றாததும் அதிசயமல்ல. உலகத்தில் பொதுவாகவே பாமர மக்களுக்கு எதிரிகள் முதலாளிகளே யாவார்கள். முதலாளிகள் என்பவர்கள், சராசரி மக்கள் தன்மைக்கு மேல் வாழ்கிறவர்களும் வாழ ஆசைப்படுகிறவர்களும் ஆதலால் பார்ப்பனர் முதல் பதவிவேட்டைக்காரர், பணப்பித்தர் வரை முதலாளி இனத்தைச் சேர்ந்தவர்ளே ஆதலால் அவர்கள் பாமர மக்களைப்பற்றிக் கவலைப்படாததும்,அவர்கள் கண்களுக்குப்பாமர மக்கள் காணப்படாததும் அதிசயமல்லவென்று மறுபடியும் சொல்லுகிறோம். இதில் பார்ப்பனர்கள் பிறவி முதலாளிகள் ஆவார்கள். மற்றவர்கள் சமயசந்தர்ப்பத்தால் முதலாளிகள் ஆகிறவர்கள். ஆதலால் இருவர் நிலையும் முதலாளித் தன்மையில் ஒன்றேயாகும். ஆதலால் கழகத்தின் விதிமுறைகளில் இத்திருத்தத்தை இவர்கள் தவிர்த்த பொது மக்கள் வரவேற்பார்கள் என்றே கருதுகிறோம்.

அடுத்தாற்போல் விதிமுறைத் திருத்தத்தில் கழகத்திற்கு நிரந்தரமாக ஒரு தலைவர் தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்பதாகும். இது ஏற்கனவே, கழகத்தின் தத்துவமாகவே இருந்துவந்ததாகும். ஆனால் நெல்லூர் மாநாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் என்பதாக, அதுவும் பெரியார் கருத்திற்கு விரோதமாகவும், டாக்டர் சுப்பராயன், எஸ். முத்தையா முதலியார் ஆகிய சுயமரியாதை உணர்ச்சியோடு மந்திரிதொண்டாற்றின மந்திரிகளான பெரியார்களைக் கட்சியை விட்டு வெளியில் விரட்டி, ஏதோ இரண்டொருவர் மந்திரி வேலையைக் கைப்பற்றவேண்டுமென்பதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சியின் பயனாய் ஒருவருட காலத்திற்கு மாத்திரம் தோழர் முனிசாமி நாயுடு தலைவராயிருக்கட்டுமென்று நெல்லூரில் பெரியாரையும், மக்களையும் வேண்டிக்கொண்டதின் பயனாய் ஒருவருட காலத்திற்கென்று சொல்லி நிரந்தரத் தலைவர் முறை மாற்றப்பட்டது என்றாலும் அவருக்குப் பிறகு நிரந்தரத் தலைவர் தத்துவமே காரியத்தில் இருந்து வந்தது. அது இப்பொழுது பழையபடி திருத்தப்பட்டதாயிற்று. அதன்படி மாநாட்டில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் கட்சித் தலைவராய் (லீடராய்) நிரந்தரமாய் இருக்கத் தெரிந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத் தகுந்ததாகும்.

# கருப்புச் சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கருப்புச் சட்டைப் படை திரட்டு வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

எறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிது சேர்க்கப் படுவார்கள் ஆதலால் அதில் சேர ச மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தகப்பன் பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

இந்தத் தன்மையை இதற்கு முன் யார் எப்படிக் கருதினாலும் இன்றுள்ள நிலையில் ஒரு இயக்கம் பாமர மக்கள் இயக்கமாக இருக்கவேண்டுமானால் பாமர மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களும், பெறத் தகுதியுடையவர்களும், பெற வேண்டியவர்களுமே தலைவராகத் தெரிந்தெடுக்கப்படவேண்டியவர்களாகும். செல்வவான்களிடத்திலும், பதவியாளர்களிடத்திலும், பணப் பெருக்கத்தாரிடத்திலும் மரியாதையும், மோகமும், நம்பிக்கையும் இருந்தகாலம் இப்பொழுது பெரிதும் மாறிவிட்டபடியால் பணக்காரனும், செல்வவானும், பதவியாளனும் கட்சியில் இருக்க வேண்டுமென்று விரும்பினால் அப்படிப்பட்டவர்கள் தங்களை மறைத்துக்கொண்டு அவைகள் இல்லாதவர்கள் போல் காட்டிக்கொள்ள வேண்டியவர்களாகவாவது இருக்கவேண்டியதாயிற்று. ஆகையினால், நம் இயக்கத்திற்கு ஒரு பெரும் பிரபுவோ, ஒரு பட்டம் பதவியாளரோ அல்லது பட்டம் பதவியை எதிர்நோக்கியிருக்கிறவரென்று கருதக்கூடியவ ஒருவரோ தலைவராகத் தெரிந்தெடுக்கப்படாமல் போனது கட்சியின் நலத்திற்கேற்றதேயாகும். கொள்கை விதி முறைகள் மாற்றத் தன்மை இவ்வாறிருக்க இனி தீர்மானங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தீர்மானங்களில் முக்கியமானது, சேலம் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானமாகும், அதாவது:

சர்க்காரால் வழங்கப்பட்ட, வழங்கப்படும் பட்டங்கள், கௌரவ நியமனங்கள், தேர்தல் அல்லாமல் ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயத்துபோர்டு ஆகியவைகளிலும் அங்கத்தினர், தலைவர் உபதலைவர் ஆகியவைகளிலும், சர்க்காரால் அங்கத்தினர் நியமனம் பெற்று அதன் பயனாய் நியமன அங்கத்தினரால் தேர்தல் பெற்றுத் தலைவர் முதலிய பதவி அடைந்தவர்களும் தங்கள் பதவிகளை உடனே ராஜிநாமா செய்துவிட வேண்டியது என்றும், சர்க்காரால் தொகுதி வகுக்கப்பட்ட எந்தவிதமான சட்டசபைத் தேர்தல்களுக்கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக்கூடாது என்றும், அதில் சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாதென்று செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தைப்பற்றி ஆராய்வோம்.

இதைப்பற்றி விவரிக்கத்தொடங்குவதற்குமுன்பு ஒரு விஷயத்தை வாசகர்கள்நினைவூட்டிக்கொள்ள விரும்புகிறோம். என்னவெனில் காங்கரஸ்காரர்கள் மந்திரி பதவியிலிருந்து வெளியாக்கப்பட்ட உடன் செட்டிநாடு ராஜா அவர்கள் மாளிகையில் கூட்டப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் (1939-லேயே) மந்திரி பதவிகளையோ ஆலோசகர் பதவிகளையோ சர்க்கார் நியமனத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதற்கடுத்தாற்போல் திருவாரூரில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி 15-வது மாகாண மாநாட்டிலும் நமக்குத் தனித் தொகுதி பிரித்துக் கொடுத்து அல்லது சட்டசபைத் தேர்தல் முறையில் தகுந்த மாற்றம் செய்து கொடுத்தால் அல்லது "நாம் கண்டிப்பாக சர்க்காரிடம் வைத்துக்கொள்ளும் எப்படிப்பட்ட சம்பந்தத்தையும் மறுக்க வேண்டியதே மானமும் நியாயமும் ஆகும்" என்று தலைவர் வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்.

பட்டம் பதவிகளை, நியமனங்களை ஏன் மறுக்கவேண்டும் என்பதற்கு உள்ள காரணங்கள் பல இருந்தாலும் ஒன்றை முக்கியமாகச் சொல்லுவோம். அதாவது நம்மை மதியாத சர்க்காரை நாம் ஏன் மதிக்கவேண்டும்? நம்மை மதியாத சர்க்காருக்கு நாம் ஏன் நல்ல பிள்ளைகளாக நடக்கவேண்டும்? நம்மை மதியாத சர்க்காரிடம் நாம் ஏன் நட்பும் விசுவாசமும் காட்ட வேண்டும்? என்பதை மான உணர்ச்சியோடு சிந்தித்துப் பார்த்தால் பட்டம் பதவி, நியமனம் ஆகியவைகள் நமக்கு இன்று ஒரு மானக்கேடான அறிகுறியாகவே காணப்படும். நடந்த யுத்தகாலத்தின் போது சர்க்காருக்கு நாம் "நிபந்தனை இல்லாத அடிமைகள்" போல் நடந்துகொண்டோம். அதற்கு சர்க்கார் அந்தச் சமயத்தில் காட்டிய பாராட்டுதல்கள் ஏராளமாகும். யுத்தத்தில் வெற்றி கண்டவுடன் அவர்கள் நடந்துகொண்டதென்ன? பிரிட்டிஷார் நாணயத்தைப் பற்றிக் காங்கரசார் யுத்தத்திற்கு முன் என்ன சொல்லிக்கொண்டு வந்தார்களோ அதை சர்க்கார் நம்மிடம்மெய்ப்பித்துவிட்டார்கள். அதாவது நம் கட்சியை ஒரு குறிப்பிடத்தகுந்த கட்சியாகக்கூட அவர்கள் கருதவில்லை. அவர்கள் அக்காலத்தில்

காட்டிய நன்றி வார்த்தைக்கும்' பாராட்டுச் சேதிக்கும் ஞாபகக் குறிப்புக்கூடக் காட்டவில்லை.

இந்தப்படி அவர்கள் நம் கட்சியை மதிக்காதது ஒருபுறமிருக்கட்டும் என்று வைத்துக்கொண்டாலும், நமக்குத் தோல்வியைக் கொடுக்கக்கூடிய மாதிரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் தேர்தல் முறைய அது நமக்குப் பயன்படாது என்று அவர்கள் நன்றாய் அறிந்திருந்தும் மறுபடியும் அந்த முறைப்படியே தேர்தல் நடத்த சர்க்கார் முற்பட்டால் அதில் நாம் கலந்துகொள்ளுவது எப்படி அறிவுடைமையாகும்?

இன்றைய் தேர்தல் முறையில் நம் நாட்டில் பார்ப்பனர் கட்சியாகிய காங்கரஸ்தான் வெற்றிபெற முடியுமே அல்லாமல் அதற்கு எதிரான எந்தக் கட்சியும் வெற்றிபெற முடியாது என்பதை இதற்கு முன் பலதடவை நன்றாய் விளக்கிக் காட்டி இருக்கிறோம்.

எப்படி எனில் நம் நாட்டில் சர்க்கார் மக்களுக்கு அளித்து இருக்கும் ஓட்டு விகிதத்தில் பார்ப்பனர்களுக்கு 100க்கு 100 வீதம் ஓட்டுக் கிடைக்கும்படியாகவும், நமக்கு, அதாவது பார்ப்பனர் அல்லாத-திராவிடர்களுக்கு அளித்து இருக்கும் ஓட்டு விகிதம் 100க்கு 9 வீதம் கிடைக்கும்படியாகவுமாகும். எப்படி எனில் படித்தவர்களுக்கு எல்லாம் ஓட்டு என்று இருப்பதால் பார்ப்பனர் 100க்கு 100 பேர் ஆண் பெண் யாவரும் படித்திருப்பதால் அவர்களுக்குள்ளே வயது வந்த யாவர்களுக்கும் (Adult Franchise) ஓட்டு என்றவாறு யாவருக்கும் ஓட்டு உரிமை கிடைத்திருக்கிறது. நம்மவர்கள் 100-க்கு 9 பேர்களே படித்திருப்பதால் 9 வீதம் ஓட்டுத்தான் கிடைத்திருக்கிறது. அதுவும் நம்மவர்கள் படித்தவர்கள் யாவரும் ஓட்டர்களாகப் பதிவு செய்துகொள்ளவில்லை; செய்துகொள்ளுவதுமில்லை; நம்மவர்களுக்கு அதில் முயற்சியும் இல்லை. பார்ப்பனர்கள் யாவரும் முயற்சி எடுத்துக் கொண்டு ஓட்டர்களாகிவிடுகிறார்கள். ஓட்டுப் பதிவு அதிகாரிகள் அவர்களுக்கு மெத்த அனுகூலம் செய்பவர்களாக இருக்கிறார்கள். காங்கரசும் அதற்கு வேலை செய்கிறது. மற்றவர்கள் என்னசெய்தாலும் தங்களால் வெற்றிபெற முடியாது என்ற எண்ணத்தால் அலட்சியமாய் இருந்துவிடுகிறார்கள்.

ஓட்டர் தகுதிக்குச் சொத்துத் தகுதியும் இருக்கிறபடியால் திராவிடர்கள் சொத்துத் தகுதியில் ஓட்டர்களாக மாட்டார்கள் என்று கேட்கப்படலாம். சொத்துத் தகுதி உள்ளவர்கள் நம்மில் 100-க்கு 10 பேர்களுக்குள்ளாகத்தான் இருக்க முடியும். அவர்களும் ஏறக்குறைய யாவரும் படித்தவர்களாக இருக்கக்கூடுமாதலால் அவர்கள் யாவரும் ஏற்கனவே படிப்புத் தகுதி உள்ளவர்களில் வந்தவர்களாகஆகிவிடுகிறார்கள்.

அதோடு பார்ப்பனர் 100-க்கு 100 பேர்களுக்கு ஆகவும் யாரோ ஓட்டுச் செய்து தவறாமல் முழு ஓட்டும் பதிவு ஆகிவிடுகிறது. நம்மவர்கள் சரிவரப் போக முடிவதில்லை, பேர் சரியில்லாததும், காங்கரசார் தொல்லையும், பதிவு அதிகாரிகள் பாரபட்சமும் சேர்ந்து பதிவு நியாயமாய் நடக்க முடியாமல் போகிறது. சர்க்காரில் பார்ப்பன ஆதிக்கமும், இன்கம்டாக்ஸ், சேல்டாக்ஸ், பாங்கி, வரிநிர்ணய, வரிவசூல், போலீசு, கிரிமினல், ரிவினியு ஆகிய துறைகள் பார்ப்பனமயமாக இருப்பதாலும், முனிசீப்பு, ஜட்ஜு, வக்கீல், டாக்டர், குரு, புரோகிதர், அர்ச்சகர், கணக்கர் ஆகியவர்கள் பெரிதும் பார்ப்பனர்களாகவே இருக்கிறபடியாலும் அதிகாரிகள் செய்யும் அக்கிரமங்களை மேல் அதிகாரிகள் கண்டிக்க முடியாதபடி ஜாதி அபிமானம் உள்ள பார்ப்பனர்களே பெரிதும் அதிகாரத்தில் கால் முதல் தலைவரை இருப்பதாலும் தேர்தல் அக்கிரமம் காங்கரசாருக்கு வசதியாயும், பலனளிக்கத்தக்கதாகவும், நம்மவருக்கு நியாயம்கூடக் கிடைக்கமுடியாததாகவும் இருக்கிறது.

இவை தவிர ஒரு தேர்தலில் பார்பனர் ஓட்டு ஒரு பங்கும் திராவிடர் ஓட்டு இரண்டு பங்கும் பதிவாகிறது என்று வைத்துக்கொண்டாலும், பார்ப்பனர் பார்ப்பனர்களுக்கும், அவர்களால் ஆதரிக்கப்படும் நபருக்கும்தான் ஓட்டுச் செய்வார்கள்; திராவிடர்கள் நமக்குப் பகுதி அல்லது பகுதிக்கு சிறிது அதிகமாகவும் பார்ப்பனர் நிறுத்திய ஆளுக்குப் பகுதி அல்லது பகுதிக்குச் சிறிது குறைவாகவும் ஓட்டுச் செய்தாலும் பார்ப்பனர் ஓட்டுச் செய்த கட்சிதான் எப்படியும் வெற்றிபெறும். அதாவது காங்கரசுக்குப் பார்ப்பனர் ஓட்டு கட்டுப்பாடாய் கண்மூடித்தனமாய் நாலில் ஒரு பகுதி தனிச் சலுகை (Weightage) ஓட்டுகள் இருப்பதால் எந்தக் காரணம் கொண்டும் திராவிடர் (பார்ப்பனர் அல்லாதவர்) இன்றையநிலையில் தேர்தலில் வெற்றிபெற முடியவே முடியாது என்று பந்தயம்கட்டிக்கூறுவோம். நம் நிரந்தரத்தோல்விக்கு இதுதான் காரணமாகும்.

அன்றியும் பார்ப்பனர் ஓட்டுகளை நம் ஓட்டுகளோடு சேர்த்துவிட்டால் நம்மவர்கள் யாருடைய ஆதரவிருந்தால் தங்களுக்கு நிச்சயம் பதவி கிடைத்துவிடும்-என்று கருதுகிறார்களோ அவர்களோடு சேர்ந்து விடுகிறார்கள். இது இயற்கையேயாகும். அதனால் தான் திராவிடர் (ஜஸ்டிஸ்) கட்சியில் பெரிதும் காங்கரசில் சேர்க்கப்படாதவர்களும், காங்கரசில் சேரமுடியாதவர்களும், காங்கரஸ் சர்க்காரை எதிர்ப்பதால் நாம் சர்க்காருடன் சேர்ந்தால் ஏதாவது பயன் கிடைக்காதா என்று கருதுபவர்களும், சர்க்காரின் வஞ்சகப் புன்சிரிப்புக்கு ஆளானவர்களும், தன் எதிர் அபேட்சகர் தனக்கு முன்பே காங்கரசில் சேர்ந்து ஸ்தானம் தேடிக் கொண்டதால் இனி நமக்கு அங்கு இடம் எப்படிக் கிடைக்கும் என்று ஏங்குபவர்களும்தான் அதிகமாய் நம் கட்சியின் பேரால் தேர்தலுக்கு நிற்க ஆசைப்படுகின்றவர்களாய் இருப்பதால் இவர்களுக்குத் தேர்தல் வெற்றி அளிக்க முடியாததாக ஆகிவிடுகிறது. கட்சி ஏற்பட்ட காலத்தில் உண்மையில் காங்கரசை எதிர்ப்பவர்களாக சிலர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்திருக்கலாம். ஆனால் டாக்டர் சுப்பராயன், சர் ஷண்முகம், தோழர்கள் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், வெள்ளியங்

கிரிக் கவுண்டர், தேவர், நாடிமுத்துப் பிள்ளை, சீதாராம ரெட்டியார், எம். கே. ரெட்டியார், கே. வெங்கிடுசாமி நாயுடு ஆகியவர்களும், இவர்கள் போன்ற மற்றும் பல பெரியவர்களும் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து காங்கரசுக்குப் போனதும், காங்கரசில் இருந்து ஜஸ்டிஸ் கட்சிக்கு வந்ததும், மறுபடியும் காங்கரசுக்குப் போனதும், எதிலும் சேராமல் சும்மா இருப்பதும் எதற்குஆக என்று பார்த்தால் எதிலிருந்தால் பயன் ஏற்படும் என்பதல்லாமல் வேறு எதை முக்கியமாகச் சொல்லக்கூடும் என்று கேட்கிறோம்.

இந்த நிலையில் திராவிட (ஜஸ்டிஸ்) கட்சியார் தேர்தலில் நிற்க அவசியமோ, தகுதியோ, வெற்றி கிடைக்கக்கூடிய சந்தர்ப்பமோ ஏதாவது இருக்கிறது என்று யார் தான் சொல்லமுடியும்?

தவிர நாம் இதற்கு முன் நின்று நின்று தோற்றதற்கு என்ன சமாதானம் சொன்னோம். தேர்தல் முறை, தொகுதி முறை சரி இல்லை என்றே சொல்லி இருக்கிறோம்.

நாம் இன்றைய தொகுதியில் எப்படியும் வெற்றிபெற முடியாதென்று கருதியே 1939ம் வருஷ முதல் "பார்ப்பனரல்லாதா"ருக்கு—திராவிடருக்குத் தனித்தொகுதி வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். சர்க்கார் கவனியாததோடு இன்றும் அவர்கள் 'தேர்தல் முடிவைக்கொண்டு ஜனநாயகத்தைப் பரீட்சை பார்த்து ஆதிக்கம் ஒப்படைக்கப் போகின்றோம்' என்கின்றார்கள். நாம் தேர்தலில் நின்று படுதோல்வி அடைந்தபின் ஜனநாயக முறையைத் தவறு என்று எப்படிச் சொல்லமுடியும். ஒரு மனிதன் தேர்தலில் நின்று தோற்ற பிறகு தேர்தல் செல்லாதென்றால் அதற்குத் தேர்தல் நடத்தும் முறை சட்டத்திலுள்ள காரணங்களைத்தான் அதில் ஏதாவது குறை இருந்தால் எடுத்துச் சொல்லி ஆட்சேபிக்கலாமே தவிர நிற்பதற்கு முன் இருந்த குறைபாடுகளைச்சொல்லி தேர்தல் செல்லாது என்று சொல்லுவது அறிவுடைமையோ மானமுடைமையோ ஆகுமா என்று கேட்கிறோம்.

ஆகவே இன்றைய தேர்தல் முறையில் ஏதாவது மாறுதல் வேண்டுமானால் தேர்தலை வெறுத்தே ஆகவேண்டும், ஒதுங்கி நிற்கவேவேண்டும். வெளியில் ஒதுங்கி நின்றிருந்தால்தான் நாளைக்கு நம்மால் வெறுக்கப்பட்ட தேர்தல் முறையில் வெற்றி பெற்று வந்தவர்கள் செய்யும் அக்கிரமத்தை வீரத்தோடு,மானத்தோடு எதிர்க்க முடியும். இயற்கைப் பலமும் நமக்கு ஏற்படும். ஆதலால்தான் தேர்தல் சம்பந்தத்தில் இருந்து அடியோடு விலக வேண்டும் என்கிறோம்.

அன்றியும் இன்றைய தேர்தல் "தகுதி" நம்மிடம் சிறிதும் இல்லை. நம்மில் எவரும் சிறை சென்றவர்கள் அல்ல, சட்டம் மீறினவர்கள் அல்ல, தண்டவாளம் பேர்த்துத் தந்தி அறுத்து, ரயிலைக் கவிழ்த்து, ஸ்டேஷன்களுக்கும்,கச்சேரிகளுக்கும் நெருப்புவைத்துக் கொளுத்தினவர்களுமல்ல, இந்திய அதிகாரிகள் முகத்தில் திராவகம் கொட்டிக் கொன்றவர்களுமல்ல. சண்டைக்கு ஆள் சேரவேண்டாம், பணம்கொடுக்கவேண்டாம் என்று சொன்னவர்களுமல்ல, இப்படியெல்லாம் செய்ய ஏவியவர்களுமல்ல, ஆதலால் ஓட்டர்கள் நம்மை மதிக்கமாட்டார்கள் என்பதோடு நாம் "தேசத்துரோகிகள்" என்று பெயர்வாங்கி இருக்கிறோம்; சர்க்காரும் நம்மை செல்வாக்கற்றவர்கள் என்று அலட்சியப்படுத்தி எதிரிகளைப் புகழ்ந்து பெருமைப்படுத்தி அவர்களைத் தாங்கள் (சர்க்கார்) செய்ததை மறந்துவிடும்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் நாம் இன்றைய தேர்தலுக்குத் தகுதியற்றவர்கள் என்கிறோம்.

இதில் ஒரு பிரச்சினை சிலரால் கிளப்பப்படுகிறது. அதாவது நம் கட்சிக்காரர்கள் சட்ட சபைத் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்பது சரி என்றும், வேறு கட்சியார் நிற்பதில் நமக்கு வேண்டியவர்கள் என்பவர்களுக்கு நமது ஓட்டுகளைக் கொடுக்கலாமல்லவா என்றும் கேட்கப்படுகிறது. அது கூடாது, அதாவது கொடுக்கக் கூடாது என்று சொல்லுவோம். அந்தப்படி ஓட்டு செய்வதில் நாம் கருத்துக்கும், நடத்தைக்கும் வேறுபாடாக நடந்தவர்களாவோம். தேர்தல் தொகுதி முறை, தேர்தல் நடப்புமுறை ஆகியவைகள் தவறு என்றும், அதனாலேயே நாம் முக்கியமாய்த் தேர்தலில் இருந்து விலகி இருக்கிறோம் என்றும் சொல்லிவிட்டு ஓட்டுகளை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்றால் இதில் அறிவுடைமையோ, உண்மையோ எப்படி இருக்க முடியும் என்று கேட்கிறோம்.

இரண்டொரு தோழர்கள் வேறு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதாவது சென்னையில் டாக்டர் கிருஷ்ணசாமி, சர் பி. டி. ராஜன், தோழர்கள் பி. பாலசுப்பரமணியம், கண்ணப்பர் முதலியவர்கள் போன்றவர்கள் தேர்தலுக்கு நிற்கிறார்களே இவர்களுக்கு ஏன் நாம் ஓட்டுச் செய்யக் கூடாது? என்று கேட்கிறார்கள். இதுவும் கூடவே கூடாது என்று சொல்லுவோம். இதைப் பிறகு விளக்குவோம்.

---

## அடித்தார் முதல் பரிசு!

திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) 17-வது மாகாண மாநாட்டின் நான்காவது தீர்மானத்திற்கிணங்க கும்பகோணம் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தாம் இதுகாறும் வகித்துவந்த "கௌரவ மாஜிஸ்டிரேட்", "சப் ஜெயில் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளர்" ஆகிய சர்க்காரின் கௌரவப் பதவிகள் இரண்டையும் ராஜினாமா செய்துவிட்டார்.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துலகிற்கும், புது வாழ்விற்கும், வழி காட்டக்கூடிய தீவிரமான ஒரு ரட்சிச் சின்னத்தை ஏற்படுத்துமாறு வேண்டிக்கொண்டு,

"நாம் திராவிடர், நம் நாடு திராவிட நாடு; இன்றேல் இடுகாடு", என்ற உணர்ச்சிகளைத் திருவாரூரில் தோன்றச் செய்து, சேலத்தில் பெருகச் செய்த இக் கொடியை உயர்த்தி வைக்கிறேன்.

## விரைந்திடு!

('வேங்காயம்')

தருப்பைப் படையைத் தாக்கியே
தமிழர் நிலையை ஊக்குவோம்,
விருப்பு, வீரம் மேலிட,
வெற்றி வேட்கை ஓங்கிட,
கருப்புச் சட்டைப் படையிலே
கலந்து கொள்ள விரைந்திடு!
இருப்பு நெஞ்சத் திராவிடா,
இறத்தல் என்றும் உறுதியே!

---

### பட்டுக்கோட்டை சு. ம. சங்கக் கட்டிட நிதி

பட்டுக்கோட்டை சுயமரியாதை சங்கக் கட்டிடம் கட்டுவதற்குத் தோழர் என். ரெத்தினசாமி அவர்களால் நிலம் செட்டில் மெண்டு பத்திரம் மூலம் 12-9-45 ல் ரிஜிஸ்டர் செய்து கொடுக்கப்பட்டு 6000 ரூபாய் செலவில் கட்டிடம் கட்டுவதற்குத் திட்டம் போடப்பட்டுள்ளது. பொருளுதவி செய்பவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகிறார்கள்.

ஆதரவு கோரும்,
கே. எஸ், சிவராம கிருஷ்ணன்.
தலைவர், சு. ம. சங்கம்.

முகவரி,
என். ரெத்தினசாமி,
பொருளாளர், சு. ம. சங்கம்,
சின்னகடைத்தெரு, பட்டுக்கோட்டை.


### மறைவு

லால்குடி தாலுக்கா இருதயபுரம் தீவிர சுயமரியாதைத் தம்பதிகளும், இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றவர்களுமான தோழர்கள் டி. சாமிநாதன்-சந்தனமேரி அவர்களின் குழந்தை தமிழ் மணி தனது 6-வது வயதில் 25-9-45-ல் இயற்கை யெய்தியது குறித்து வருந்துவதோடு தமிழ் மணியை இழந்து தவிக்கும் பெற்றோருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் அறிவித்துக் கொள்கிறோம்.

### மாநாட்டிற்கு மதுரைத் தோழர்கள்

திருச்சி மாநாடுகளுக்கு, மதுரைமாவட்டத்திலிருந்து மதுரை, சோளவந்தான், வாடிப்பட்டி, திண்டுக்கல், சின்னாளபட்டி, வக்கம்பட்டி, கல்வார்ப்பட்டி, நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, தேவதானப்பட்டி, பெரியகுளம், தேனி, போடி, தேவாரம், மேலூர், ஒத்தக்கடை முதலியஊர்களிலிருந்து சுமார் 400 பிரதிநிதிகளுடனும், சுமார் 20 குடும்பங்களும் குழந்தைகுட்டிகளுடன் வந்திருந்தார்கள் குடும்பங்களுடன் வந்திருந்தார்களில்,


தமிழ் வைத்தியத்தின் தனிப்பட்ட பெருமையை
நிலைநாட்டி நிற்கும் அற்புத மருந்து!



ஜெயராம்
**காயசுத்தி லேகியம்**
இதை வெல்லுவதற்கு வேறு மருந்து கிடையாது.
இரண்டே வேளையில் குணம்.

வாந்தி, மயக்கம், தலைவலி, தொண்டைப் புண், நெஞ்சுவலி, முதுகுவலி, வயிற்றுவலி, குடல் வாதம், இடுப்புவலி, கைகால்வலி, மூலநோய் முதலியவைகளை நீக்கி மலத்தை சுகமாய்ப் பிரித்து, பசியைக்கொடுக்கும்.

காலை, மாலை களச்சிக்காயளவு சாப்பிட்டு மேலே கொஞ்சம் பால் அல்லது வெந்நீர் குடிக்கவும்.

1-சேர் 48-நாளைக்கு ரூ. 4. ½-சேர் 24-நாளைக்கு ரூ. 2-2-0, V.P.P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.



திராவிடன் பதிப்பகம் வெளியீடு-3

**பகுத்தறிவுப் பாமாலை**

பகுத்தறிவுப் பாமாலையைப்பற்றி அடியில் வருமாறு விமர்சனம் வெளியாயிருக்கிறது. திராவிடநாட்டின் ஒப்பற்ற சீர்திருத்த எழுத்தாளர் தோழர் ஈழத்தடிகள் அவர்கள் கூறுகிறார். தோழர் டி. ஆர். வீரண்ணன் அவர்களால் ஆக்கப்பெற்ற "பகுத்தறிவுப் பாமாலை" என்னும் இந்நூல் ஈடு எடுப்பில்லாத ஒரு பகுத்தறிவுக் களஞ்சியமாகவே திகழ்கின்றது.

...........இப்பாடல்கள் பொது மேடைகளில் பாடப்பட்டு மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தர வல்லது என்பது உறுதி.

...........இப்புது நூல் யாவராலும் வரவேற்கப்படுமென்பதில் எத்துணையும் ஐயமில்லை. விலை அணா 0-4-0 அழகிய பதிப்பு.

விற்பனையாளர்கட்குத் தக்க லாபம் தரப்படும்.

விபரங்கட்கு:
திராவிடன் பதிப்பகம், தபாற்பெட்டி 18, வேலூர் வ. ஆ.


முக்கியமானவர்கள்: சி. முத்திருளாண்டி எம். பட்டினத்தார், மாஸ்டர் குருசாமி, பி. பொன்ராமன், கருப்பையா முனியாண்டி, பொன்னம்பலஜோதி, அ. காசிவிஸ்வநாதன் முதலியவர்கள். தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் 50 தொண்டர்கள் கொண்ட மதுரை திராவிடத் தொண்டர் படையொன்று செஞ்சட்டையுடன் கொடி. வாழ்த்தொலிகளுடன் புறப்பட்டு, திருச்சி ரயில்நிலையத்திலிருந்து ஊர்வலமாக வந்தது குறிப்பிடத்தகுந்தது. ஷை தொண்டர்படைகள் மாநாடுகளிலும் பங்கு எடுத்துக் கொண்டு உழைத்தன.

தவிர திண்டுக்கல் மத்திரன், சோளவந்தான் ஆவுடையப்பன், வாடிப்பட்டி சுப்பையா, [illegible] பி. சுந்தரம், [illegible] முத்தையா, அழகுசுந்தரம் முதலிய தோழர்களும் வந்திருந்தார்கள், என மதுரை திராவிடர் கழகச் செயலாளர் தோழர் சி. முத்திருளாண்டி எழுதுகிறார்.

### திருமணம்

சென்னைக்கடுத்த பறங்கிமலை ஆதம்பாக்கத்தில் 16-9-45 காலை 9 மணிக்கு தோழர்கள் ஆர். பாலகிருஷ்ணன்—லட்சுமி அம்மை திருமணம் நடைபெற்றது. தோழர் பூ. கணேசன் தலைமையில் தோழர்கள் வெற்றிச்செல்வி அம்மையார், கே. அன்பழகன், என். வி. நடராசன் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். 'குடி அரசு'க்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கிக்கொண்டவர்களாகக் கருதப்பட வேண்டியவர்களாவார்கள்."

மேற்கண்ட சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை இம்மாநாடு ஒப்புக்கொண்டு அமுலுக்கு வர அனுமதி அளிக்கிறது.

முன்: சி. என். அண்ணாதுரை
பின்: என். அர்ச்சுனன்

**5. 'கிரேட் டிரவிடியன் ரெயில்வே':**

ஒன்றாக இணைக்கப்படப் போகும் S. I. R. (எஸ். ஐ. ஆர்.), M. & S. M. R. (எம். & எஸ். எம். ஆர்) என்றுபெயரிடப்பட்டுள்ள இரண்டு ரயில்வேக்களுக்கும் இனி "கிரேட் டிரவிடியன் ரெயில்வே" என்று பெயரிடவேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

முன்: டி. சண்முகம்.
பின்: டி. சே. சீனிவாசன்.

**6. மற்ற கட்சிகளுடன் தொடர்பு:**

திராவிட நாட்டுப் பிரிவினைத் திட்டத்தையும், திராவிடர் கழக சமுதாயக் கொள்கைகளையும் ஒப்புக்கொள்ளாத எந்த அரசியல் கட்சிகளோடும், திராவிடர் கழகம் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

முன்: சி. என். அண்ணாதுரை
பின்: கே. அன்பழகன்

**7. பப்ளிக் சர்வீஸ் கமிஷன்:**

சர்வீஸ் கமிஷன் செலக்ஷனுக்கு, ஆதிதிராவிடர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இருப்பதுபோன்றே திராவிடருக்கும் குறைந்த பட்சம் யோக்யதையும், வயது விகிதமும் நிர்ணயிக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

முன்: டி. பி. வேதாசலம் பி. ஏ.,
பின்: எஸ். கஜேந்திரன் பி. ஏ.,

**8. திருமணப் பதிவுச் சட்டம்:**

திருமணப் பதிவுச்சட்ட அதிகாரம் தற்போது ஜில்லா ரிஜிஸ்டிரார்களின் அதிகாரத்திலிருப்பதால் பதிவுத் திருமணம் செய்ய விரும்பும் ஜனங்களுக்கு உதவியாக மேற்படி அதிகாரத்தை ஒவ்வொரு தாலூக்காவிற்கும் ஆங்காங்குள்ள உத்தியோகடபற்றற்ற யாராவது தக்கார் ஒருவருக்கு அளிக்கப்படவேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

முன்: கே. கே. நீலமேகம்,
பின்: வி. சின்னதம்பி,
கும்பகோணம்.

**9. வீரருக்கு வேலை வசதி:**

விஷமப்பிரசாரத்தையும், ஐந்தாம் படை வேலையையும் பொருட்படுத்தாமல் பட்டாளத்திலே சேர்ந்து வீரப் பணியாற்றிய திராவிடர்களுக்கு, படைக் கலைவுக்குப் பிறகு, சர்க்கார் தக்க வாழ்க்கை, வேலை வசதிகள் செய்து தரவேண்டுமென்று சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: பி. ஜனார்த்தனம்,
பின்: ஏ. சங்கரய்யா.

**10. பள்ளியில் மதபோதனை:**

மதபோதனை ஆரம்பப் பள்ளிகளில் வைக்கக் கூடாது என்று திருவாங்கூர் சர்க்கார் செய்திருக்கும் முடிவை இம்மாநாடு வரவேற்கிறது. அவ் விதத்திலேயே, எவ்வித மதபோதனையும் பள்ளிகளில் வைக்காமலிருகக சென்னை சர்க்கார் தீர்மானித்து உத்திரவிட வேண்டுமாய் இம்மாநாடு வேண்டுகிறது.

முன்: அ. சித்தையன், சேலம்.
பின்: டி. ஏ. எஸ். சாமி, சென்னை

**11. கோயில் நுழைவு**

இந்த மாகாணத்திலே, சில கோயில்களிலே, ஆதித்திராவிடரை அநுமதித்தும் சில கோயில்களில் அநுமதிக்காமலும் இருக்கும் போக்கை இம்மாநாடு கண்டிப்பதோடு, மாகாணத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் ஆதித் திராவிட மக்கள் செல்ல அநுமதிக்க வேண்டும்.

முன்: டி. சண்முகம்
பின்: நெடுஞ்செழியன்
வழி: அண்ணாதுரை

எதிர்ப்பு:- எம். எஸ். சிவசாமி,
தூத்துக்குடி.
எஸ். ஆர். சுப்பிரமணியம்,
திருப்பூர்.

திராவிடர் கழகத்தார் கோயில்கள் கள்ளர் குகைகளாகும் என்று கருதுவதால், கோயில் பிரவேசம் வேண்டாது, கோயில்களை இடித்துத் தள்ளவேண்டும் என்று எதிர்த்த தோழர்கள் இருவரும் அபிப்பிராயப்பட்டனர்.

ஓட்டுக்கு விட்டபோது, பெருவாரியான மக்களால் ஆதரிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேறியது.

**12. மான்ய நிலங்கள்:**

ஆதித்திராவிட முன்னோர்கள் பழங் கால அரசாங்கத்துக்கு ஊழியம் செய்து வந்ததற்கு ஈடாக அளிக்கப்பட்ட இனாம் ஊழிய மான்ய நிலங்கள் ஜாதி ஹிந்துக்களால் கைப்பற்றப்பட்டதால் இப்போதைய யுத்த முனையிலேயும், 1914-18-ல் நடந்த யுத்த முனையிலேயும் ஆதிதிராவிட சமூக வாலிபர்கள் பெரும்பான்மையோர் முன்னின்று தியாகம் செய்து இருப்பதால் பரம்பரைப் பாத்தியம் என்ற முறையில் மேற்படி இனாம் ஊழிய மான்ய நிலங்களை வாங்கி கிரயத்தைத் திரும்பவும் கொடுத்துவிட்டு அச்சமூகத்தவருக்கே அளிக்குமாறு சென்னை கவர்னர் அவர்களை திராவிட மாநாட்டினர் கேட்டுக்கொள்கிறார்கள்.

முன்: பி. ராமசாமி, திருச்செங்கோடு.
பின்: ராமச்சந்திரன்

**13. கட்சித் தலைவர்:**

திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி திராவிடர் கழகத்திற்கு நிரந்தரத் தலைவராக (Leader) பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களை இம்மாநாடு தீர்மானிக்கிறது.

முன்: சி. என். அண்ணாதுரை
பின்: கே. கே. நீலமேகம்

**14. மேன்மை, திறமை**

'மேன்மை', 'திறமை' (Merit and Efficiency) ஆகியவற்றின் பெயரால் தற்பொழுது ஹைக்கோர்ட் ஜட்ஜ் முதல் சாதாரண பிராமணன் வரையில் ஆரியர் அத்தனைபேரும், மேன்மையும், திறமையும் உடையவர்கள் என்ற சாக்குச் சொல்லி பிராமணப் பிள்ளைகட்கு மட்டும் கல்வி வசதி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில், புதிதாகக் கல்லூரிகள் ஏற்படுத்த நடத்தி வரும் முயற்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது; பார்ப்பனர்களால் திரட்டப்படும் நிதிக்குப் பொருளுதவி செய்யக்கூடாது என்று பார்ப்பனரல்லாத செல்வந்தர்களைக் கேட்டுக்கொள்கிறது.

முன்: டி. ஏ. எஸ். சாமி, அட்வகேட்
பின்: எஸ். கஜேந்திரன்.

**15. பாரதிதாசன் நிதி:**

நமது திராவிடநாட்டுப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் நிதிக்குப் பணம் கொடுத்துதவுமாறு திராவிடப் பெருங்குடி மக்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: டி. வி. நாராயணசாமி,
பின்: ப. கண்ணன்,
வழி: ஏ. சித்தையன்.

**16. கைத்தறித் துணி:**

திராவிடர்களாகிய நாம் அனைவரும் காங்கரஸ் போரால் நடைபெறும் கதர்த் திட்டத்தை வெறுப்பதோடு கதர் உடையாக அணியாமல், கைத்தறியில் தயாரான துணிகளையே உடையாக அணிந்து நம்நாட்டுக் கைத்தறி மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: அ. க. தங்கவேலு.
பின்: ஏ. சித்தையன்.

**17. நெசவாளர் குறை**

சென்னை மாகாண சர்க்கார் தற்காலம் யுத்த காலத்தை அநுசரித்து ஏற்படுத்தப் போட்டிருக்கும் கைத்தறி நெசவாளர்களின் (கூபன்) நூல் வினியோகக் கார்டு முறை சரியாக எல்லா நெச

வாளர்களுக்கும் கொடுக்கப்படாமையால், 'கார்டு' இல்லாது தவிக்கும் நெசவாளருக்குத் தக்க முறையில் (கூபன்) அளித்து ஆதரவு செய்ய வேண்டுமாய் இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

முன்: அ. க. தங்கவேலு
பின்: பாபு செட்டியார்,
மன்னார்குடி.

**18. துணிவிலை கட்டுப்பாடு:**

கைத்தறித்துணிகள், வெளி இடங்களுக்கு 36ம் நம்பருக்குமேல் ஏற்றுமதி செய்யக்கூடாதென்று, மாகாண நூல் கமிஷனர் போட்டிருக்கும் தடையினால் மாகாணக் கைத்தறிக்காரர்களுடைய நிலைமை மிகவும் மோசமாகி அவர்கள் வாழ்க்கை பாதிக்கப்படுவதனால் அந்தடையை உடனே ரத்துசெய்ய வேண்டுமாயும், கைத்தறி ஜவுளிகளுக்கு விலை கட்டுப்பாடு செய்வதும், நெசவுக்காரர்களை மிகவும் பாதிக்குமாகையால், மாகாண கமிஷனர் விலை கட்டுப்பாட்டு எண்ணத்தை கைவிடும்படியும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: எ. சித்தையன்
பின்: செங்கல்வராயன்
எதிர்ப்பு: பெரியசாமி,
தூத்துக்குடி.

**19. கால்நடை, விவசாயம்:**

உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படவேண்டும் என்பதற்காகவும், விவசாயிகளினுடைய சவுகரியத்துக்காகவும், இனிமேல் தண்ணீர் இறைக்க மின்சாரமும், கால் நடை வைத்தியசாலைகள் அதிகமாகவும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மாநாடு மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

முன்: என். அர்ச்சுனன்
பின்: ராமசாமி, நல்லிபாளையம்

**20. ரயில்வே தொழிலாளர்:**

தென்னிந்திய ரயில்வே நிர்வாகம், போரின் காரணமாகத் தற்சாலிகமாக பல்லாயிரக்கணக்கான திராவிடத் தோழர்களை வேலைக்கெடுத்து, போர் முடிந்தவுடன் அவர்கள் ஆபத்துக் காலத்தில் உதவி செய்ததை மறவாது, அவர்களுக்குத்தக்க வேலை கொடுக்குமாறு ரயில்வே நிர்வாகத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்: டி. கே. சீனிவாசன்,
பின்: ஜி. பராங்குசம்.

**21. பர்மா, மலேயா, சிலோன், இந்தியா:**

(அ) பர்மா, மலேயா, சிலோன் முதலிய வெளிநாடுகளில் உள்ள இந்திய மக்களின் உரிமைகள், வியாபாரங்கள், சொத்துகள், நிலங்கள், அந்தஸ்து ஆகியவை ஆங்கிலேயர்களுக்கு உள்ளது போன்று பாதுகாக்கப்படுவதோடு, தொழிலாளர்களின் உரிமையும் பாதுகாக்கப்படவேண்டுமென்று இந்திய அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்வதோடு, இந்திய அரசாங்கம், சென்னை அரசாங்கம், வெளிநாட்டு இலாகா மெம்பர் முதலியவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் முடிவு செய்கிறது.

(ஆ) பர்மா-மலேயா முதலிய நாடுகளுக்குத் தாமதமின்றிப் போக்குவரத்து வசதிகள் செய்து அங்கு செல்லவேண்டியவர்களுக்குத் தாமதமின்றி அனுமதிவழங்குவதோடு சென்னை மாகாணத்திலேயே அதற்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கக் கோருகின்றது.

முன்: கஜேந்திரன்,
பின்: க. அன்பழகன்.

**22. கைத்தறி தொழில் கமிட்டி:**

திராவிட நாட்டில் முக்கியமான தொழிலான கைத்தறித் தொழிலில் ஈடுபட்டவர்களுடைய குறைகளைப் போக்க ஒரு கமிட்டியை நியமிக்குமாறும், திராவிடநாடு கோரிக்கைகளுக்கு இதில் முதலிடம் கொடுக்கும்படியும் பெரியார் அவர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்: முத்துசாமி,
பின்: சி. வி. எம். அண்ணாமலை.

**23. திராவிடர் கழகத்தில் பெண்கள்:**

திராவிடர் கழகத்தில் பெண்கள் ஏராளமாகச் சேர்ந்து, திராவிடருடைய விடுதலைக்காகப் பாடுபடவேண்டுமென்று இம்மாநாடு திராவிடத் தாய்மார்களைக் கேட்டுக் கொள்கிறது.

முன்: மூவலூர் ராமாமிர்தத் தம்மையார்,
பின்: அலர்மேலு அம்மாள்.

**24. பிற இடங்களில் பிரசாரம்:**

கன்னடம், தெலுங்கு, மலையாளப் பகுதிகளிலே நமது பிரசாரம் நடைபெறப் பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவேண்டும்.

—தலைவர்.

**25. திராவிட விடுதலைப் படை:**

திராவிடரின் விடுதலைக்காகப் போரிடவும், சகலவித நடவடிக்கைக்கும் தயாராக இருக்கவும் இசையும் ஒரு மாகாண திராவிட விடுதலைப் படை (Dravidian Freedom Force) அமைக்க வேண்டுமென்றும், அதற்கு ஊர்தோறும் கிளைப்படைகள் அமைக்க வேண்டுமென்றும் இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

தலைவர்

தலைவர் பெரியார் 1 மணி நேரம் தமது முடிவுப் பிரசங்கம் செய்தார். அதன்பின் மாநாடு முடிவுற்றதாகத் தோழர் கஜேந்திரன் அவர்களால் அறிவிக்கப்பட்டு, பொதுக் கூட்டம் உடனே தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் மாநாட்டுப் பந்தலிலேயே மாலை 7-15 மணிக்குத் தொடங்கப்பெற்றது. நாகூர்தோழர் ஹனீபா திராவிடநாட்டைப்பற்றி ஓர் கவிதை பாடினார். முதலாவதாக பெங்களூர் ஜில்லா போர்டு தலைவர் தோழர் எச். ஆர். குருவா ரெட்டியார் B. A., LL. B., M. L. C. அவர்கள் ஆங்கிலத்தில் திராவிடர் கழகத்தையும், பெரியார் அவர்களையும் பாராட்டிப் பேசினார். அவர் சொற்பொழிவைத் தோழர் டி. ஏ. எஸ். சாமி தமிழில் மொழிபெயர்த்தார்.

பின்னர் தோழர்கள் க. அன்பழகன், கே. வி. அழகிரிசாமி, ஏ. பி. ஜனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

(விளக்கமான தீர்மானங்கள் பின்னர் வரும்)

---

## தோழர்களுக்கு அறிவிப்பு

ஜெயராம் காயசுத்திலேகியத்திற்காக திருச்சி மாநாட்டில் எமது ஸ்டாலில் முன்பணம் கொடுத்தவர்கள் தயவுசெய்து அவரவர் விலாசத்தைத் தெரிவிக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்
ஜெயராம் வைத்தியசாலை,
23, காசிவிஸ்வநாதர் கீழவீதி,
கும்பகோணம்

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.